# அவதாரமும்
# கிறித்தவமும்

**பேராசிரியர் முனைவர் யா. தா. பாசுகரதாசு**
M.A.(Tamil)., M.A.(Econ.)., M.Ed., M.Phil., Ph.D., Cert. in Sanskrit.

**நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்**
முன்னாள் தேசியத் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்
**508, 22 -ஆம் தெரு, பெரியார் நகர், கொரட்டூர், சென்னை - 600 080.**

அவதாரமும் கிறித்தவமும்

பேராசிரியர் முனைவர் யா. தா. பாசுகரதாசு

© NILT

முதற்பதிப்பு 2008

**நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்**

508, 22 –ஆம் தெரு, பெரியார் நகர்,

கொரட்டூர், சென்னை – 600 080.

பேசி: +91-44-26248563

மின்னஞ்சல்: nilt.india@gmail.com

இணையதளம்: www.niltindia.org

அட்டை வடிவமைப்பு: மோரியா ஊழியங்கள்

இந்நூலினை வெளியிட உதவிய
இயேசுவின் குடும்ப ஊழியத்தாருக்கு
எங்கள் இதயம் நிறைந்த நன்றி!

**Jesus Family Ministry**
**951, West Side Ave, Jersey City, NJ 07306, USA.**

# அணிந்துரை

பேராசிரியர் முனைவர் யா.தா. பாசுகரதாசு அவர்கள் இந்திய மக்களிடையே சமய நம்பிக்கைகளாக நிலவிவரும் கருத்துகளைப் பன்னெடுங் காலமாக ஆராய்ச்சி செய்து வருபவர். ‘அவதாரமும் அடியவர்களும்’ என்னும் தலைப்பில் இவர் எழுதிய தொடராய்வுக் கட்டுரைகள் ஏறத்தாழ இருபத்து மூன்று தொடர்களாக வெளிவந்தன. ‘சைவ சித்தாந்தத்தில் அவதாரக் கோட்பாடு உண்டா?’ என்னும் இவரது ஆய்வுக் கட்டுரையைப் படித்த பன் மொழிப் புலவர் க. அப்பாத்துரையார், இவரைப் பேரறிஞர் என்றே பாராட்டி மகிழ்ந்தார். சென்னைப் பல்கலைக் கழகத்தில் ‘ஆய்வியல் நிறைஞர்’ப் பட்டத்திற்காக ‘அவதாரக் கோட்பாடு ஓர் ஒப்பாய்வு’ என்னும் ஆய்வேட்டைப் படைத்துள்ளார்.

தற்போது ‘அவதாரமும் கிறித்தவமும்’ என்னும் இச் சிறுநூல் பொதுமக்கள் புரிந்துகொள்ளும் வகையில் எழுதப்பட்டது. இந்திய மக்களின் கருத்துமுறையையும் கிறித்தவக் கோட்பாட்டையும் ஒப்பீடு செய்து இவர் இந்நூலில் எளிமையாக விளக்கிக் காட்டியிருப்பது மிகவும் பாராட்டுதற்குரியது. அவதாரக் கோட்பாட்டின் இலக்கணங்களை வரையறுத்துக் கூறுவதாக இவரது நூல் அமைந்திருக்கிறது. இந்நூல் எல்லாருக்கும், சிறப்பாகக் கிறித்தவர்களுக்கும் நற்செய்தியாளர்களுக்கும் மிகப் பயனுடையதாக விளங்கும் என்பது என் நம்பிக்கை.

மேலும் ‘நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவன’த்தின் வெளியீடாக இந்நூல் வெளிவருவது எமக்கெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இந்திய மக்களுக்கு இந்தியப் பின்னணியில் நற்செய்தி அறிவிப்பவர்க்குப் பயிற்சிக் களனாக இந்நிறுவனம் இயங்குகிறது. நூலாசிரியர் இந்நிறுவனத்தின் துணைத் தலைவராகவும் பாடத் திட்ட இயக்குநராகவும் செயலாற்றுகிறார். இறை பணிக்காக மேலும் நல்ல பல நூல்களை இயற்றித்தர இவருக்கு இறைவன் அருள்பாலித்திட அவதாரக் கடவுளைப் போற்றி வாழ்த்துகிறேன். இந்நிறுவனத்தின் தலைவர், செயலர் மற்றும் பொறுப்பாளர் அனைவர்க்கும் நன்றி! நூல் சிறப்பான உருவத்தோடு வெளிவர உதவிய திரு. சான் செயானந்தம், திரு. போசு பொன்ராசு அவர்கட்கும், ‘இயேசுவின் குடும்ப ஊழியம்’ போதகர் ஆசுவின் மைக்கேல் அவர்கட்கும் மிகுந்த நன்றியுடையேம்.

சென்னை — திருமதி. டோரா ஜஸ்டின் (பொருளாளர்)
18.09.008 — நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்

# ஆசிரியர் உரை

‘அவதாரம்’ என்றவுடன் பொதுவாக, அ஀து இந்து சமயத்திற்கு உரிமையானது எனப் பலரும் கருதுகின்றனர். அவ்வாறே ‘ஊனுடம்பெடுத்தல் (Incarnation) என்றால் அது கிறித்தவத்திற்கு உரிமையானது என்றும் கருது கின்றனர். கடவுள் மனிதனாக இவ்வுலகிற்கு வந்தார் என்னும் வரலாற்று உண்மையை விளக்குவதற்காகப் புனை கதைகளும் புராணக் கதைகளும் பெரிதும் துணைபுரிந்துள்ளன.

வரலாற்றை விளக்கும் வண்ணம் புராணங்கள் எழுதப் படவில்லை என்றாலும் அவற்றில் அடிப்படை உண்மைகள் பொதிந்துள்ளன. எனினும் அவதாரத்தை விளக்கும் புராணக் கதைகள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வெவ்வேறு விதமாகப் புனையப்பட்டுள்ளன. அவதாரமாக வந்த கடவுளைச் சில புனைந்துரைகள் அசிங்கப்படுத்தியுள்ளதையும் காண்கிறோம். கடவுள் மனிதனாக இவ்வுலகில் பிறந்து வாழ்ந்தாலும் அவரிடம் கடவுட் பண்பும் மனிதப் பண்பும் நிறைவாகவே இருந்தன என்பதை விளக்கும் வண்ணம் இச்சிறுநூல் எழுதப்பட்டுள்ளது. எல்லாரும் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையாக எழுதப்பட வேண்டும் என்ற முயற்சியில் உருவானது இது. அதில் வெற்றி பெற்றிருக்கிறேனா என்பதை வாசகர்கள்தாம் சொல்ல வேண்டும்.

கிறித்தவத்தையும் அவதாரத்தையும் இணைத்தும் ஒப்பீடு செய்தும் காண்பது என்பது மிகப்பரந்துபட்டதொரு களம் ஆகும். அறிஞர் பெருமக்கள் பலர் இது குறித்து எழுதியுள்ளனர். அறிஞர்களுக்காக எழுதப்பட்ட எனது எழுத்துகள் இன்னும் நூல் வடிவம் பெறவில்லை. இறையருளும் பொருளுதவியும் கிட்டுமேல் அவையும் அச்சாகும்.

இச்சிறு நூலை வெளியிட முன்வந்த ‘நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவன’த்தாருக்கு எனது உளங்கனிந்த நன்றியை உரித்தாக்குகிறேன். இந் நிறுவனத் தலைவர், திரு. கா. ச. பாண்டித்துரை, செயலர் திரு. இர. சௌந்தர்ராசன், பொருளர் திரு. அ. சா. இராசசேகரன், பாடத்திட்ட ஒருங்கிணைப்பாளர் போதகர் சாரோன் தேவப்பிரசன்னம் ஆகியோருக்கும் நூல்வெளிவர உதவிய போதகர் ஆசுவின் மைக்கேல் அவர்கட்கும் என் உளங்கனிந்த நன்றி. இந்நூல் உங்கள் கைகளில் தவழப் பல்லாற்றானும் துணைநின்ற இறையருளைப் போற்றி மகிழ்கின்றேன்.

தொலைபேசி +91-44-26245777
9444225454

முனைவர் யா.தா. பாசுகரதாசு
துணைத் தலைவர் (பாடத் திட்டம்)
நற்சான்றோர் தலைமையாளர் பயிற்சி நிறுவனம்

# அவதாரமும் கிறித்தவமும்

## எது அவதாரம்?

‘அவதார்’ என்பது சமற்கிருதச் சொல். அவ+தார் அவதார்; ‘அவ’ என்பதற்குக் கீழே என்றும் ‘தார்’ என்பதற்கு இறங்கி வரு தல் என்றும் பொருள். ‘அவதார்’ என்று கூட்டுச் சொல்லாகச் சேர்த்து எழுதும் போது ‘கீழே இறங்கி வருதல்’ என்று பொருள் படும். இதனோடு ‘அம்’ என்னும் விகுதி சேர்க்கப்பட்டு ‘அவதாரம்’ எனத் தமிழில் வழங்கப்படுகிறது.

இந்தியத் தொன்மங்களில் (புராணங்கள்) அவதாரம் என்பது இலக்கண நெறியை ஒட்டியதாக அமையாமல் மிகவும் சாதாரண முறையில் கதை போன்று விளக்கப்படுகிறது. சில இடங்களில் பொருத்தமற்றவையும் அறிவுக்கு ஒவ்வாதனவுமான புனை கதை ளும் அவதாரத்தோடு இணைத்துப் பேசப்படுகின்றன. இதனால் அவதாரம் என்பதன் உன்னதமான பொருளைச் சாதாரண மக்கள் கொச்சையாகக் கூடப் புரிந்து கொள்ளும் நிலைகளும் உள்ளன.

மிகவும் எளிமையாக விளக்க வேண்டுமானால் கடவுள் மனிதனாக இவ்வுலகில் பிறந்து வருவதே அவதாரமாகும்.

கடவுள் இந்நிலவுகில் மாந்தனைப் போன்று தோற்ற மளிப்பது அவதாரமாகாது. அவர் மாந்தனாகப் பிறந்துவருதல் வேண்டும். அந்தப்பிறப்பும் திவ்வியமான பிறப்பாக இருத்தல் வேண்டும். அது மாசு மறுவற்றதாக இருத்தல் வேண்டும் - என்றெல்லாம் மறை நூல்கள் விளக்கிக் கூறுகின்றன.